10.08.2026

O.S.NO. 165/2025

P.W. 2– திரு.மாயாண்டி ராஜன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–

என்னுடைய தொழில் விவசாயம் ஆகும். வாதியை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 20, 25 ஆண்டுகளாக தெரியும். வாதியின் தகப்பனார் பெயர் என்ன என்றால் தெரியாது. பிரதிவாதியின் அப்பா தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில் யார், யார் மீது வழக்கு போட்டுள்ளார்கள் என்று தெரியும். இந்த வழக்கில் பிரதிவாதி என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் கொடுத்த பணத்தை கேட்டு தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதியை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் கடந்த 20 வருடங்களாக தெரியும். எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த நிருபண வாக்குமூலம் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது. அங்கு என்னை அழைத்த சென்றது யார் என்றால் வழக்கறிஞர் என்னை அழைத்தார். நான் சென்றேன். வழக்கறிஞர் என்னை என்ன சொல்லி அழைத்தார் என்றால் சுரேஷ் வழக்கு தொடர்ந்திருப்பதாக கூறி என்னை வரச்சொன்னார். நான் இதுவரை அம்பாசமுத்திரம் சார்பு நீதிமன்றம், முன்சீப் நீதிமன்றங்களில் எத்தனை வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் நான் சாட்சியம் அளிக்கவில்லை. நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்ட விவரங்கள் நான் சொல்லி தயாரிக்கப்பட்டதா அல்லது தயார் செய்து

வைத்திருந்ததில் நான் கையெழுத்து செய்தேனா என்றால் நான் சொல்லி தான் தயாரிக்கப்பட்டது. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்க்காததால் அதில் என்ன விவரம் சொல்லப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரதிவாதி குடும்ப செலவிற்காக பணம் வாங்கினார் என்றும், அதை திருப்பி செலுத்தாததால் தான் வழக்கு தொடரப்பட்டதாக சொல்லி தான் நிருபண வாக்குமூலம் தயாரிக்கப்பட்டது. பிரதிவாதி எனக்கு 25 ஆண்டுகள் பழக்கம் என்பதால் அவருடைய குடும்ப சுக, துக்க நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டுள்ளேனா என்றால் இல்லை. வாதி எனக்கு 25 ஆண்டுகள் பழக்கம் என்பதால் அவருடைய குடும்ப சுக, துக்க நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டுள்ளேனா என்றால் இல்லை. புரோ நோட் ஒரே பேனாவால் எழுதப்பட்டதா அல்லது இரண்டு பேனாவால் நிரப்பட்டதா என்றால் ஒரே பேனாவால் எழுதப்பட்டது. புரோ நோட்டில் கண்ட விவரங்கள் அனைத்தும் மற்றும் கையெழுத்தும் ஒரே பேனாவால் எழுதப்பட்டதா என்றால் ஒரே போனாவால் தான் எழுதப்பட்டது. ஏற்கனவே நான் அம்பாசமுத்திரத்தில் 3 வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புரோ நோட் எங்கு வைத்து எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 11.12.2022 ல் எனது வீட்டில் வைத்து எழுதப்பட்டது. எனக்கு ஆவணம் எழுதும் பழக்கம் உண்டா என்றால் 20 வருடங்களாக எழுதிக்கொண்டுயிருக்கிறேன். வா.சா.ஆ.1 ல் கண்ட முன்கடன் தீர்ப்பதற்காக என்ற வரியை நான் எழுதவில்லை என்றால் நான் தான் எழுதினேன். அதை நான் எழுதியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. முன்கடன் தீர்ப்பதற்காக என்ற வரிக்கு மேலாக உள்ள வரியும் அதுவும் வேறு, வேறு கையெழுத்து என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது எதிர்வழக்குரையில்

சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எதுவும் நான் தாக்கல் செய்ததாக சொல்லும் முதல் விசாரணையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் நான் சொன்னதேதியில், வாதியிடன் பிரதிவாதியிடம் பணம் பெறவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி வாதியை என் வீட்டிற்கு அழைத்து வந்ததாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கண்ட கையெழுத்து இந்த பிரதிவாதியின் கையெழுத்து இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கையெழுத்திடும்போது நானும், சாட்சியும் பார்த்தாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பெரிய நிலசுவான்தார் என்றால் இல்லை. பிரதிவாதி பெரிய நிலசுவான்தார் என்பதால் அவர் யாரிடமும் கடன் பெறவேண்டியதில்லை என்று சொன்னால் சரியல்ல. பாலமுருகன் என்பவர் என் முன்பாக சாட்சி கையெழுத்திட்டார் என்பதை அவரை விசாரித்தால் உண்மை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். முதல் விசாரணை அபிடவிட் கண்ட விவரங்கள் அனைத்தும் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து எனது அறிவுக்கு எட்டாமல் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், பிரதிவாதிக்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே பல நீதிமன்றங்களில் சாட்சியம் அளித்திருப்பதால் அதை அனுசரித்து பிரதிவாதி வாங்காத கடனை நான் மற்றும் வாதி, நபர்கள் சேர்ந்து பொய்யாக இந்த புரோ நோட்டை தயார் செய்த இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,
Tirunelveli.